தீரர் தில்லான
தோன்றும்
கொள்ளையர் குகை
குணா கரூர்
ரூ.3

குழந்தைகளே !
Acron
உலகத் தரம்வாய்ந்த பலரக
ஆர்ட் மெட்டிரியல்கள் இங்கே உள்ளன.
பிடிலைட்
அக்ரான்
உங்கள் கற்பனை சிறகடித்துப் பறக்கட்டும்
• போஸ்டர் கலர்ஸ் • ஆயில் கலர்ஸ் • வாட்டர் கலர் கேக்
பேஸ்டல்ஸ் • வாக்ஸ்/பிளாஸ்டிக்

ராணி காமிக்ஸ் – 368 அக்டோபர் 16 – 31
(மாதம் இருமுறை இதழ்) 1999

தீரர் தில்லான் குணாகரூர் கொள்ளையர் குகை

தீரர் தில்லான் டோஜ் நகருக்கு காவலாக இருந்தாலும் சில விஷமிகள் நகருக்குள் நுழைந்து அங்குள்ளவர்களுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தார்கள். தில்லான் ஒவ்வொருமுறையும் அவர்களைக் கண்டுபிடித்து அந்நகரை விட்டு அவர்களை விரட்டியடிப்பது வழக்கம். அவர்கள் கொலை கொள்ளை என்று ஆயுதத்தை கையில் எடுக்கும் போதெல்லாம் தில்லான் அவர்களுக்கு பதிலடி கொடுத்து அவர்களை சட்டத்தின் கையில் ஒப்படைப்பார். இந்தக் கதையிலும் அப்படித்தான். ஒரு கொள்ளையர் கூட்டம் நைசாக டோஜ் நகருக்குள் புகுந்து பல பண்ணைகளின் சொந்தக்காரர்களுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இதை அறிந்த தீரர் தில்லான் அவர்களைத் தேடிப் புறப்பட்டார். இனி கதைக்கு வாருங்கள்...!

முகமூடி வீரர் மாயாவி

தொடர் படக்கதை!

57 -ம் பக்கம்

டோஜ் நகரில் உள்ள இரும்புப் பட்டறை ஒன்றில்—
சர்க்கிள்—டி என்ற பண்ணை நிலத்தை எப்படியாவது எனக்கு முடித்துத் தரவேண்டும்!
ரூஸ்வெல்ட்! யார் முதலில் விலைக்கு பேசினார்களோ அவர்களுக்குத்தான் முடித்துக் கொடுப்பேன்! அது உழுவதற்கு ஏற்ற நல்ல நிலம்!
நான் அதை வாங்கி இந்த பிரதேசத்தில் நல்ல விளை நிலமாக்கிக் காட்டுவேன்!

அது நல்ல
விளைநிலம் என்று எனக்குத்
தெரியும்! எனக்கு அங்கே ஒரு
பண்ணை வீடு கூட இருக்கிறது!

அந்தப் பண்ணையை
எனக்கு மரியாதையாக
கொடுத்துவிடு!

இங்கே பார்! இந்த பண்ணைக்கு ஏக கிராக்கி
உண்டு! ஆடு, மாடுகள் மேய்வதற்கு
ஏற்ற இடம்!

ரூஸ்வெல்ட் சென்றதும் மார்ஷல் தில்லான் அங்கே வந்தார்.
குட்மார்னிங் மார்ஷல்!
குட்மார்னிங் பிராங்க்!
ரூஸ்வெல்ட் இங்கே வந்துவிட்டு போகிறானே என்ன விஷயம்?
ஆமாம் தில்லான! ரூஸ்வெல்ட் சர்க்கிள்—டி பண்ணையை விலைக்கு கேட்கிறான்!
நான் என்ன செய்யட்டும் மார்ஷல்?
அது இருக்கட்டும் பிராங்க்! நான் எதற்காக இங்கே வந்தேன் தெரியுமா?

காலையில் நான் மல்போர்டை சந்தித்தேன்! இன்று மாலை ரோசி உன்னை சந்திப்பதாக சொன்னதை நினைவுபடுத்தச் சொன்னாள்!
நன்றி தில்லான்! அவள் என்னை சந்திப்பதை மறக்க முடியுமா?
அவள் வரும்போது வண்டிச்சக்கரத்தை தயாராக செய்துவைத்து இருப்பாயாம்!
ஓ.கே. நான் அதற்குள் தயார் செய்துவிடுவேன்!

தில்லான் பிராங்கின் கடையைவிட்டு வெளியே வந்தார்.
அலோ... மார்ஷல் தில்லான்!
குட்மார்னிங் பிராண்ட்! என்ன இந்தப் பக்கம்!
உன்னை சந்திக்கவேண்டிய கட்டாயம் எனக்கு வந்துவிட்டது!
என பண்ணையில் உள்ளவன் ஒரு கெட்ட செய்தியை கொண்டுவந்திருக்கிறான்! அதனால்தான் உன்னை பார்க்க வந்தேன்!

நேற்று இரவு யாரோ என் பண்ணையில் உள்ள 50 மாடுகளின் தலையை துண்டித்துப் போட்டிருக்கிறார்கள்! இது யாருடைய வேலை என்று எனக்குத் தெரியவேண்டும்!

அப்படியா! இதற்குப் பின்னே விவசாயிகள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?

இருக்கலாம்! அதற்காக என் பண்ணை ஆட்கள் பட்டினியாகக் கிடக்க வேண்டுமா? இதை கண்டுபிடிக்காவிட்டால் நகரில் மோசமான விளைவுகள் ஏற்படும்!


ரூஸ்வெல்ட் தன் சகாக்களுடன் மல்போர்டின் பண்ணைக்கு வந்தான்.
இதுதான் மல்போர்டின் பண்ணை! நமக்கு தேவையானதை இங்கே நிறைவேற்றிக்கொள்ளலாம்!

பண்ணையில்–
அப்பா! இவர்களைத்தான் நாம் வெறுத்து ஒதுக்கிவிட்டோமே! இங்கே எதற்கு வருகிறார்கள்! ஜாக்கிரதை அப்பா!

ரோஸி! இவர்களை நான் கவனித்துக்கொள்ளுகிறேன்! நீ உள்ளே போம்மா...!

மல்போர்டு! நீ இப்படி கீழ்த்தரமாக நடந்து கொள்வாய் என்று நான் எதிர்பார்க்க வில்லை!
ரூஸ்வெல்ட்! என்ன உளறுகிறாய்! வார்த்தையை அடக்கிப் பேசு!
ஏய்... இவனிடம் என்ன பேச்சு! இவனை கட்டிப்போடுங்கடா..!
இந்த பிரதேசத்தில திருடர்களுக்கு என்ன தண்டனை என்று காட்டவேண்டும்!
மல்போர்டை தாக்கினார்கள்.

ஏய்... நிறுத்துங்கள்! இல்லை சுட்டுத் தள்ளிவிடுவேன்!
இதுதான் மல்போர்டின் மகள் ரோஸி! ஆள் அழகாகத்தான் இருக்கிறாள்!
மரியாதையாக என் அப்பாவை விட்டுவிடுங்கள். இல்லை உங்கள் உடல் வெடித்துச் சிதறிவிடும்!
மார்ஷல் தில்லான் காப்பாற்ற வருவான் என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்கிறாயா?

ஏய்... என் அப்பாவை என்ன செய்யப் போகிறீர்கள்?

நேற்றுதான் சர்க்கிள் டி பண்ணையில் 50 மாடுகளை படுகொலை செய்துவிட்டு வந்திருக்கிறோம்!

தில்லானுக்கு உங்கள் மீது சந்தேகம் வரவேண்டும் என்பதற்காக உங்கள் பொருட்களை அங்கே விட்டுவிட்டு வந்திருக்கிறோம்! இது எப்படி இருக்கு?

அவர்கள் சென்றபிறகு, தில்லானும், டேவும் மல்போர்டு பண்ணைக்கு வந்தார்கள்.
ரோஸி! மாடுகளை படுகொலை செய்த குற்றத்திற்காக உன் தந்தையை கைது செய்கிறோம்!
தில்லான் இது பொய்! இது திட்டமிட்ட சதி! என் அப்பா நிரபராதி!
தெரியும் ரோஸி! முதலில் அதை நிரூபிக்க வேண்டும் அல்லவா? அதனால்தான் கைது செய்கிறேன்! டேவ் வா போகலாம்!


ரோஸி உடனே
பிராங்கை பட்டறையில்
சந்தித்தாள்.
கேள்விப்பட்டேன்
ரோஸி! தில்லான் எதைச்
செய்தாலும் காரணமில்லாமல்
செய்ய மாட்டார்!

என் அப்பா நிரபராதி!
அவரை முதலில்
சிறையில் இருந்து
வெளியே கொண்டு
வரவேண்டும்!

இதற்கெல்லாம் காரணம்
அந்த கொள்ளைக்காரன்
ரூஸ்வெல்ட்தான்!
அவனைப் பற்றி
எனக்கு நன்கு தெரியும்!

தில்லான் அலுவலகத்தில்—
டாக்டர்! இந்த படுகொலைக்கும் மல்போர்டுக்கும் சம்பந்தமில்லை என்று எனக்குத் தெரியும!
அப்படியானால் மல்போர்டை ஏன் சிறையில் அடைத்திருக்கிறீர்கள்?
ஆனால் பிராண்ட் கொலை நடந்த இடத்தில் மல்போர்டின் செருகுகுச்சியை கண்டு எடுத்திருக் கிறாரே?
தில்லான்! ஒரே குழப்பமாக இருக்கிறது!

இந்தக் கொலையின் பின்னணியில் ஏழை விவசாயிகள் இருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படித்தானே?
பாவம் இந்தக் கொலையில் ஏழை விவசாயிகள் பலி ஆடுகளாக ஆக்கப் பட்டிருக்கிறார்கள்!
பார்ரோ ஒருவன் விவசாயிகளையும் பண்ணை முதலாளிகளையும் மோதவிட்டு குளிர்காயப் பார்க்கிறான்!

ஓ.கே. டாக்டர்! நீங்கள் சொல்வதை வைத்துப் பார்த்தால் அதற்கு ஆதாரம் வேண்டுமே!
நான் எதற்கும் விவசாயிகளை சந்தித்துவிட்டு வருகிறேன்!
தில்லான்! பிராங்க் உங்களை பார்க்க வருகிறான்!
என்ன பிராங்க்! இன்று உன்னை பார்க்க முடிய வில்லையே?
ஒரு அவசர வேலை. அதான் வர முடியவில்லை!

தில்லான்! ரோஸி எல்லாம் சொன்னாள்! நான் இந்த கொலையை கண்டுபிடிக்க தயாராக இருக்கிறேன்!
ரொம்ப நன்றி பிராங்க்! நான் இப்போது விவசாயிகளை சந்திக்க புறப்படுகிறேன். நீயும் வா!
ஓ.கே. தில்லான்! நானும் உங்களுடன் வருகிறேன்!

தில்லானும், பிராங்கும் மல்போர்டு பண்ணைக்கு வந்தார்கள்.
ரோஸி! கொஞ்சம் வெளியே வாயேன்!
தில்லான்! ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது! ரோஸியை காண வில்லையே?
இதோ... குதிரை வந்து போனதற்கான அடையாளம் இருக்கிறதே!
ஆமாம் தில்லான்! இது குதிரையின் கால்தடயம்தான். இந்த மாதிரி ஒரு லாடத்தை நான் என் பட்டறையில் பார்த்ததே இல்லை!

இது ரூஸ்வெல்டின் குதிரையின் லாடம்தான். சந்தேகமில்லை! அவன்தான் ரோஸியை கடத்திச் சென்றிருக்க வேண்டும்!


அவசரப்படாதே பிராங்க்! அவன் நட்புக்காக இங்கே வந்துவிட்டு போயிருக்கலாம் அல்லவா?

வாருங்கள் தில்லான்! நாம் இந்த குதிரை தடத்தை பின்பற்றிச் சென்றால் உண்மை தெரிந்துவிடப் போகிறது!

குட்மார்னிங்
பிராண்ட் !
குட்மார்னிங் தில்லான் !
உதவி எதுவும் வேண்டுமா ?
ஒன்றுமில்லை. இந்தப்
பக்கமாக ரூஸ்வெல்ட்
சென்றாரா !
ஆமாம் ஒரு மணி
நேரத்துக்கு முன்பு மல்போர்டு
பண்ணைக்கு
போனாரே ?
மல்போர்டு
பண்ணைக்கா ?
ஆமாம் !
அவனிடம் நான்கூட
ரோஸிக்கு ஒரு செய்தி
கொடுத்து அனுப்பினேனே !

ரூஸ்வெல்ட் திரும்பி வரும்பொழுது பண்ணையில் ரோஸி இல்லை என்று சொன்னார்!
என்னது....?
பொறு பிராங்க்! நன்றி மிஸ்டர் பிராண்ட்! வழியில் ரூஸ்வெல்டை பார்த்துக்கொள்கிறோம்!
இருவரும் கிளம்பினார்கள்.
சே...! தினமும் நான் ரோஸியைப் பார்க்கச் செல்வேன். இன்றைக்கு வேலையின் காரணமாக பார்க்க முடியாமல் போய் விட்டதே!

தில்லான் நில்லுங்கள்! இந்த இடத்தில் ரூஸ்வெல்ட் தன் பாதையை மாற்றியிருக்கிறான்!
ஏதோ ஒரு இடத்துக்கு செல்ல நினைத்திருந்தவன், திடீரென்று இடத்தை மாற்றியிருக்கிறான்!
பிராங்க்! எனக்கென்னமோ அப்படித் தோன்றவில்லை! அவன் சாதாரணமாகத்தான் சென்றிருக்க வேண்டும்!

ரூஸ்வெல்ட் அதிக தூரம் சென்றிருப்பான்! எப்படியும் அவனை கண்டுபிடித்தே தீரவேண்டும்!


ஓ.கே. பிராங்க்! இப்போது எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்று நீயே சொல்!
இந்த வழியாக செல்வோம்!

ஒரு மணி நேர பயணத்துக்குப் பிறகு—
இதோ இந்த இடத்தில் நின்று குதிரைக்கு தண்ணீர் காட்டியிருக்கிறார்கள்!

பிராங்க்! இருட்டத் தொடங்கி விட்டது! நாம் டோஜ் நகருக்கு புறப்படலாமா?
அப்படியானால் ரூஸ்வெல்டை என்ன செய்வது?
எனக்கு அவன் மீது சந்தேகம் ஏற்படவில்லை! நாம் வீணாக அவனை பின்தொடர்ந்து செல்கிறோம் என நினைக்கிறேன்!
தில்லான்! என் ரோஸி அவள் வீட்டிலிருந்து காணாமல் போயிருக்கிறாள். ரூஸ்வெல்ட்தான் கடைசியாக அவளை சந்தித்து இருக்கிறான்

ஓ.கே. பிராங்க்! நாம் இங்கேயே இரவு தங்கிவிட்டு காலையில் தேடும்படலத்தை தொடங்கலாம்!
இருவரும் ஓய்வெடுத்தார்கள். சிறிது நேரத்தில்—
தில்லான்! எழுந்திருங்கள்!
பிராங்க்! நான் தூங்கவில்லை! அந்த சத்தத்தை நானும் கேட்டேன்!
இருவரும் எழுந்து சத்தம் வந்த திசையில் சென்றார்கள்.
தில்லான்! அதோ அந்த பாறைக்கு பின்னே இருந்துதான் சத்தம் வருகிறது!

அங்கே ஆற்றில் ஒரு மிதவை மிதந்துகொண்டிருந்தது.
தில்லான்! அங்கே ஒரு மிதவை இருக்கிறது. பார்த்திர்களா?
மிதவை ஆற்று நீரோட்டத்த அடித்துவரப்பட்டிருக்கிறது வா போய் பார்க்கலாம்!
இருவரும் மிதவையில் இறங்கினார்கள்.
தில்லான்! மிதவையில் குதிரையின் சாணம் கிடக்கிறது பார்த்திர்களா?


மிதவை அதோ அந்த குகைக்குள் அல்லவா செல்கிறது!

இப்பொழுது என்ன செய்யலாம் தில்லான்?
இந்த குகைக்குள் போய்வரத்தான் மிதவையை பயன்படுத்தியிருக்கிறார்கள்! நாமும் உள்ளே போனால் உண்மை தெரிந்துவிடும்!

மிதவை மூலமாகத்தான் குதிரையை ஏற்றி குகைக்குள் சென்றுவிட்டு திரும்பியிருக் கிறார்கள்!

தில்லான்! நான் இந்த கம்பை வைத்து மிதவையை செலுத்துகிறேன்! நீங்கள் கயிற்றை மெல்ல விடுங்கள்!

கயிற்றை விடவிட மிதவை மெல்ல குகைக்குள் செல்கிறது பார்த்தீர்களா? வின்ஞ் போல மிதவை செயல்படுகிறது!

இந்தக் கம்பை வைத்துத்தான் மிதவை சுவரில் மோதாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதிருக்கிறது!

பிராங்க்! இந்த மிதவையில்தான் ரூஸ்வெல்ட் சென்றிருப்பான் என்று நினைக் கிறாயா?
இருக்கலாம் தில்லான்! மிதவை சேரும் இடத்தை வைத்து கண்டுபிடித்துவிடலாம்!
இதோ வெளிச்சம் தெரிகிறதே!
ஆமாம்! நாம் குகையின் அடுத்த பக்கத்துக்கு வந்துவிட்டோம் என நினைக்கிறேன்!

மிதவை குகையைவிட்டு வெளியே வந்தது.
இங்கே மிதவையை நிறுத்தி மரத்தில் கட்டுவோம்!
மிதவையை கட்டிவிட்டு இருவரும் இறங்கினார்கள்.
அங்கே பாருங்கள்! கூட்டமாக அமர்ந்து தீமூட்டி குளிர் காய்கிறார்கள!
நிச்சயமாக இவர்கள் கொள்ளையர்கள்தான் பிராங்க்!
சரியாக கண்டுபிடித்து விட்டீர்களே! மரியாதையாக துப்பாக்கியை கீழே போடுங்கள்!

மார்ஷல் தில்லான்! எங்கள் தலைவர் உன்னை பார்த்தால் ரொம்ப மகிழ்வார்!
உங்கள் தலைவன் ரூஸ்வெல்ட் என்று எனக்குத் தெரியும்!
தில்லான்! நீ சரியான இல்லாடிதான்! சரியாக கண்டுபிடித்துவிட்டாயே!
ஓ.கே. வாருங்கள் போகலாம்!
அவன் அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்றான்.

சாம்! தலைவர் அவர்கள் இருவரையும் அழைத்துவரச் சொன்னார்!
அவர்களும் நம் தலைவரை பார்க்கட்டும்!

அங்கே ரூஸ்வெல்ட் இருந்தான்!
டோஜ் நகரத்து இரு தூண்களே வருக! வருக!!

ரூஸ்வெல்ட்! நடந்த பிரச்சினைகளுக்கெல்லாம் நீதான் காரணம்! ஆரம்பத்தில் இருந்தே நான் உன்னை கவனித்துக்கொண்டுதான் வருகிறேன்.

பிராங்க்! நீங்கள்
இன்னும் என்னை முழுமையாக புரிந்து
கொள்ளவில்லை! போகப்போகத் தெரியும்! சாம்
இவர்களை அந்த குகைக்குள் கொண்டுபோ!
அவர்கள் கதையை இங்கே முடித்துவிட
வேண்டும். மற்றவர்கள் தில்லானை தேடி
வருவதற்குள் நாம் தப்பியாக வேண்டும்!
நாம் இருந்த
அடையாளம எதுவுமே
இருக்கக்கூடாது. உள்ளே சில முக்கிய
பொருட்களை எடுத்து வருகிறேன்!
ஓ.கே. தலைவரே!

கொள்ளையர்களின் குகைக்குள்ளே தில்லானையும், பிராங்கையும் அழைத்துப் போனார்கள். உள்ளே ரோஸி இருந்தாள்.
ஓ.... பிர்ராங்க! என் நிலையை பார்த்தாயா? எல்லாம் ரூஸ்வெல்டின் வேலைதான்!
ரோஸி! உன்னை எப்படி இங்கே கொண்டு வந்தார்கள்?
ரூஸ்வெல்ட்தான் என் பண்ணைக்கு பிராண்டு கொடுத்த கடிதத்தை கொண்டு வந்தான்!
அந்தக் கடிதத்தில் என்ன இருந்தது?

பிராண்டுக்கு என் அப்பா மீது இருந்த சந்தேகத்தை பேசித் தீர்த்துக்கொள்ள என் அப்பாவை அழைத் திருந்தார்!
குற்றத்தை ரூஸ்வெல்ட் செய்துவிட்டு பழியை என் அப்பா மீது போட்டிருந்ததால், அவனுடன் சண்டை போட்டேன்!
உடனே அவன் என்னை வலுக் கட்டாயமாக இங்கே கடத்தி வந்துவிட்டான்! பிராண்ட்டை கூட பார்க்க விடவில்லை!

தில்லான் ! இவளுடைய அழகு என்னை பைத்தியமாக்கிவிட்டது !
ரூஸ்வெல்ட் ! எங்களை என்ன செய்யப் போகிறாய் ?
இன்னும் இரண்டு மணி நேரத்தில் நாங்கள் இடம்பெயரப் போகிறோம் !
நாங்கள் எங்களிடம் இருக்கும் மாட்டு மந்தைகளை பத்திக்கொண்டு இந்த மாநிலத்தைவிட்டு ஓடப்போகிறோம் !

நீ எங்களை எதுவும் செய்ய முடியாது தில்லான்!
தலைவரே! எல்லாம் தயார்!
நான் நம் கொள்ளையர் குகைக்கு வெடிகுண்டு வைத்துவிட்டு வருகிறேன்! அதன்பிறகு இந்த மூவரும் குண்டு வெடித்து சிதறப்போகிறார்கள்.
அவர்கள் இனி இந்த இடத்தைவிட்டு தப்ப நினைத்தாலும் முடியாது! அதற்குள் நாம் இந்த மாநிலத்தின் எல்லையை தாண்டியிருப்போம்!

சாம்! இவர்களை கவனித்துக்கொள்! நான் குகைக்கு வெடிகுண்டு வைத்து விட்டு வருகிறேன்!
ரூஸ்வெல்ட்! யானை தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டது போல நீ உன் வாழ்க்கையை முடித்துக்கொள்ளப் போகிறாய்?
தில்லான்! உன்னிடம் பேசுவதற்கு இது நேரமில்லை! முதலில் உன் கதை முடியப்போகிறது. நீ என்னைப் பற்றி சொல்கிறாயா?

ரூஸ்வெல்ட் இவர்களை சாமிடம் ஒப்படைத்துவிட்டு புறப்பட்டான்
நாம் தப்பிக்க குகை வழியாகத்தான் செல்ல வேண்டும்! ஆனால் ரூஸ்வெல்ட் குகையை சிதற வைத்து விடுவான் போலிருக்கிறதே!

பிராங்க்! இனிமேல் தான் நான் என் வேலையை காட்டப்போகிறேன்! பொறுத்திருந்து பார்!

பிராங்க்! நீ இவனை கவனித்துக்கொள்! நான் வெளியே சென்று ரூஸ்வெலடை கவனிக்கிறேன்!
ஓ.கே. தில்லான்!

ரூஸ்வெல்ட் தன் தோழர்களுடன் அந்தக் குகைக்குத்தான் செல்வான்!
ஏய்... இங்கிருந்து ஒரு அடி எடுத்து வைத்தால் உன் உடம்பில் உயிர் இருக்காது! எச்சரிக்கிறேன்!
அப்படியா...? அதையும் பார்த்து விடுவோம்!
முட்டாள்! சும்மா பிதட்டாதே!
கும்...!
பிராங்க் அவனைத் தாக்கினான்.

தில்லான்! நீங்கள் செல்லுங்கள்! இவன் செத்த பாம்பு! கடிக்காது!
துப்பாக்கியை உபயோகிக்காதே! சத்தம் கேட்டு வேறு எவனாவது உள்ளே வந்துவிடுவான்!
ரூஸ்வெல்ட் ஒரு குதிரையையும் சில பைகளையும், வெடிகுண்டையும் எடுத்துக்கொண்டு மிதவையில் ஏறினான்.
தில்லான் ரூஸ்வெல்டை பார்த்தார்.
இதோ ரூஸ்வெல்ட! மிதவையில் ஏறி தப்பியோடப் பார்க்கிறான்! விடக்கூடாது!

ரூஸ்வெல்ட் குகைக்கு
குண்டு வைத்துவிட்டு
அவன் மட்டும் தப்பியோடப்
பார்க்கிறான்.
விடக்கூடாது!

உடனே தில்லான்
துப்பாக்கியை
எடுத்துக்கொண்டு
சிறிப்பாய்ந்தார்.

தில்லான் மிதவையில்
ஏறி ரூஸ்வெல்ட்டை
துப்பாக்கிமுனைக்கு
கொண்டுவந்தார்.
ரூஸ்வெல்ட்!
மிதவையை அப்படியே
நிறுத்து! இல்லாவிட்டால்
சுட்டுத்தள்ளிவிடுவேன்!

ஏய்... தில்லான்!
நீ எப்படி வெளியே வந்தாய்?
உன் ஆட்களை சமாளிப்பது எனக்கு பெரிய காரியமல்ல!
அப்போது ரூஸ்வெல்டின் ஆட்கள் இருவர் தில்லானுக்கு பின்னே வந்தார்கள்.
தில்லான்! நீ முதலில் துப்பாக்கியை கீழே போடு! இல்லையென்றால் சுட்டுத் தள்ளி விடுவோம்!
ஜிம்! சரியான நேரத்துக்கு வந்தாய்!
ஜிம்! அவசரப்படாதே! உன் தலைவன் உங்களை ஏமாற்றிவிட்டு பணத்துடன் தப்பியோட பார்க்கிறான்!

ரூஸ்வெல்ட் ! எல்லாவற்றையும் நீயே எடுத்துக்கொண்டால் எங்கள் பங்கு என்னாயிற்று ?
முதலில் நான் குகைக்கு வெடி வைத்துவிட்டு வருகிறேன். பிறகு நம் பங்கை பிரித்துக்கொள்ள லாம் !
அந்தக் கதை வேண்டாம்! முதலில் எங்கள் பங்கை கொடுத்துவிட்டுப் போ !
அடுத்த நொடி— ரூஸ்வெல்ட் துப்பாக்கியை எடுத்தான்.
உன் பங்குதானே ! இதோ வாங்கிக் கொள் !
டுமீல்...!
ஆ...!

உடனே தில்லான் ரூஸ்வெல்ட்டை சுட்டுத் தள்ளினார்.
முட்டாள்!
அதற்குள் தில்லான் மற்றவர்களையும் சுட முயன்றார்.
தில்லான்! எங்களை ஒன்றும் செய்து விடாதீர்கள்!
முதலில் நீங்கள் ரோஸியையும் பிராங்க்கயும் விடுவித்துவிட்டு சரணடையுங்கள்!

அன்று மாலை அனைவரும் தில்லான் அலுவலகத்துக்கு கொண்டுவரப் பட்டார்கள்.
மல்போல்டு! உங்களுக்கு சிரமம் கொடுத்தமைக்கு மன்னிக்க வேண்டும்!
இல்லை தில்லான்! நான் குற்றமற்றவன் என்பதை நிரூபித்தமைக்கு மிக்க நன்றி!
எல்லாம் நல்லபடியாக முடிந்தது! இனி எங்கள் திருமணம்தான்!
செஸ்டர்! பிராங்க் நம் நகருக்கு கிடைத்த திறமையான கொல்லன். அதேபோல குடும்பம் நடத்துவதிலும் திறமை சாலியாக இருப்பான்
(முடிந்தது

புதிய படக்கதை தொடர்

முகமூடிவீரர் மாயாவி 1

மாயாவி மின்னலைவிட வேகமானவர் என்பது கானகப் பழமொழி.
டுமீல்! டுமீல்!
மாயாவி வந்த வேகத்தில் அவர்கள் கையில் இருந்த துப்பாக்கியை சுட்டுத்தள்ளினார்.
துப்பாக்கி பறிபோனதும் ஒருவன் கத்தி வீசினான்.
மாயாவி அந்தக் கத்தியையும் தவிடு பொடியாக்கினார்.
டுமீல்...!
ஏய்... வா ஓடிவிடலாம்! இவன் எமகாதகனாக இருக்கிறான்!
அவர்களை தப்பவிடாமல் மாயாவி மேலே பாய்ந்தார்.
நில்லுங்கடா...!

பாய்ந்த வேகத்தில் அவர்கள் தலையை நச்சென்று தரையில் மோதினார்.
அய்யோ !
னங்...!
னங்...!
அடுத்து தன் இரும்புக் கையால் ஒங்கி ஒரு குத்துவிட்டார்.
அம்மா !
கும் !
ஜோ ! உனக்கு ஆபத்து எதுவுமில்லையே?
சரியான நேரத்துக்கு நீங்கள் வராவிட்டால் என்னை கொன்றிருப்பார்கள் !
உன் அதிருஷ்டம் நான் வந்துவிட்டேன் !
என்னிடம் தங்கம் இருப்பதாக நினைத்து என்னிடம் வந்திருக்கிறார்கள் !
மாயாவி அவர்களை கட்டிப்போட்டார்,
நீங்கள் இருவரும் எங்கிருந்து வருகிறீர்கள்?

நீங்கள் செய்த குற்றத்துக்கு வாம்பசியினர் கொடுக்கும் தண்டனையை அடைந்தே தீரவேண்டும்!
ஜோ! நீ என்னுடன் வந்து சாட்சி சொல்ல வா!
சாட்சி எதற்கு?
எங்களை கொல்லப் போகிறீர்களா?
இது வாம்பசி எல்லை! எனவே அவர்கள்தான் உங்களுக்கு தண்டனையை நிறைவேற்றுவார்கள்!
நீ எப்படி எங்களை குற்றவாளி என்று சொல்வாய்?
முட்டாள்! இவர் மாயாவி! இந்தக் காட்டுக்கே காவலர்!
மாயாவி அவர்களை வாம்பசி கிராமத்துக்கு அழைத்து வந்தார்.
வாம்பசி கிராமத்தில்- தலைவன் ஒருவனுக்கு தீர்ப்பு வழங்கிக்கொண் டிருந்தார்.
இவன் தலையை வெட்டு!

தலைவரே! நான் நிரபராதி! என்னை நம்புங்கள்!
மாயாவி வாம்பசி கிராமத்துக்கு வந்தார்...
தலைவரை பார்க்க வேண்டும்! இரண்டு குற்றவாளிகளை கொண்டுவந்திருக் கிறேன்!
தலைவர் உள்ளேதான் இருக்கிறார்!
வணக்கம் மாயாவி! வாருங்கள்!
இதோ இவர்களுக்கும் தண்டனை வழங்க வேண்டும்!
மாயாவி! இவர்களை சிங்கத்துக்கு உணவாக்கி விட்டுமா?
சிங்கத்துக்கா...?
ஜோ சாட்சி கூறினார்.
இவர்கள் தங்கத்துக்காக என்னை கொல்லப் பார்த்தார்கள்!
இல்லை! இவரிடம் தங்கம் வாங்கத்தான் நாங்கள் வந்தோம்!
துப்பாக்கியை காட்டி என்னை மிரட்டினார்கள்!
இவன்தான் மிரட்டினான். நான் உதவி கேட்டு கூச்சலிட்டதால் மாயாவி வந்தார்!
இல்லை நான்தான் கத்தினேன்!

இது என்ன புதுக் குழப்பம்!
தலைவனும் குழம்பிப் போனார்.
ஜோ! நீ உதவி கேட்டுக் குரல் கொடு பார்ப்போம்!
இப்போது நீங்கள் உதவி கேட்டு கத்துங்கள் பார்ப்போம்!
மாயாவி! இதில் யார் குரலை நீங்கள் கேட்டீர்கள்?
ஜோ குரலைத்தான் கேட்டேன்!
இதோ நான் 'தீர்ப்பு கூறுகிறேன்!
எங்களுக்கு நகரச் சட்டப்படிதான் தண்டனை வழங்க வேண்டும்!
சம்பவம் நடந்தது வாம்பசியின் எல்லைக்குள்!

எனவே இங்கு நான்தான் தண்டனை வழங்குவேன்!
இவர்களை எரிமலைக்குள் உள்ள நரகத்துக்கு இழுத்துச் செல்லுங்கள்!
தீர்ப்பு கூறப்பட்டதும் மாயாவி புறப்பட்டார்.
நரகமா? அது எங்கே இருக்கிறது!
இதுவரை காட்டில் நான் கேள்விப்படாத இடமாக இருக்கிறதே!
மாயாவி தன் குகைக்கு வந்தார்.
குரன்! நரகம் எங்கே இருக்கிறது? உனக்குத் தெரியுமா?
நரகமா... அது ஒரு மர்மப் பிரதேசம் ஆச்சே...!
(தொடரும்)

அடுத்த காமிக்ஸ்
லேடி ஜேம்ஸ்பாண்ட்
மாடஸ்தி
தோன்றும்
மனித வேட்டை
நொடிக்கு நொடி சீறும் துப்பாக்கி!
பக்கத்துக்கு பக்கம் மாடஸ்தியின் அதிரடித் தாக்குதல்!!
படிக்கத் தவறாதீர்கள்!
நவம்பர் 1 "ராணி காமிக்ஸ்" இதழில் வெளிவருகிறது!
"ராணி காமிக்ஸ்", சென்னை—600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

Regd.with the registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971-8567

Amul

Marketed by: Gujarat Co-op. Milk Marketing Federation Ltd., Anand 388001. E-mail: gcmmf@amul.com
Visit Amul on the Internet at - www.amul.com

daCunha/AB/25/99